**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 150/2020 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 3 |
| Name | : | கார்த்திகா, வயது 23 |
| Father Name/Husband Name | : | விக்னேஷ் |
| Village | : | சென்னை |
| Taluk | : | சென்னை |
| Calling | : | இல்லதரசி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of June 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும் அவர் தான் எனது அப்பாவிற்கு விபத்து ஏற்படுத்தியவர் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும். கடந்த 14.08.2019 ஆம் தேதி எனது அப்பா பத்திரம் போடுவதற்காக தெற்குஆரைக்குளத்திற்கு போனார்.
2. அப்போது எனது அப்பா பத்திரத்தை வீட்டில் வைத்துவிட்டு போய்விட்டார். என்னிடம் எனது அம்மா பத்திரத்தை அப்பாவிடம் கொடுத்து வரச்சொன்னார். நானும் எனது அக்காவும் பத்திரத்தை எடுத்துக்கொண்டு அப்பாவின் கடையில் இருந்த வண்டியில் போனோம்
3. அப்பா வேலையை முடித்துவிட்டு அப்பா முன்னாடி போனார் நாங்கள் பின்னால் வந்தோம். அப்போது ஒரு வேனும் ஒரு ஆட்டோவும் போட்டிபோட்டுக்கொண்டு வந்தன. அப்போது ஓரமாக சென்ற எனது அப்பா மீது வேன் மோதியது. அதில் எனது அப்பா தூக்கி எறியப்பட்டு கை, கால்களில் காயம் ஏற்பட்டு தலையில் காயம்பட்டு மூளை வெளியே வந்துவிட்டது.
4. உடனே நானும் அக்காவும் வண்டியை நிறுத்திவிட்டு சென்று பார்த்துவிட்டு பின்னர் எனது அம்மாவிற்கு போன் மூலம் தகவல் சொன்னோம். பின்னர் மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி எனது அக்கா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் வசித்த மேட்டமலை சாத்தூர் அருகே உள்ளது என்றால் சரிதான். மேட்டமலையில் இருந்து தெற்குஆரைக்குளத்திற்கு போகவேண்டும் என்றால் கோவில்பட்டிக்கு வந்து தான் போகவேண்டும் என்றால் சரிதான். நீங்கள் இருச்சக்கர வாகனத்தில் போகவேண்டும் என்றால் சுமார் 2 மணிநேரம் ஆகும் என்றால் ஒன்னேமுக்கால்மணிநேரம் ஆகும்.
2. சம்பவத்தன்று உங்கள் அப்பா ஓட்டபிடாரம், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தான் போனார் என்றால் சரிதான். உங்கள் அப்பா மேட்டமலையில் இருந்து எத்தனை மணிக்கு போனார் என்றால் சுமார் 08.00 மணியிருக்கும். உங்கள் அப்பாவிற்கு வண்டி ஓட்ட லைசன்ஸ் கிடையாது என்றால் இருந்தது அது தொலைந்துவிட்டது.
3. உங்கள் அப்பாவை சந்திக்க நீங்கள் ஓட்டபிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் வரை செல்லவில்லை என்றாலும் செல்லும் வழியில் பார்த்தீர்கள் என்றாலும் சரிதான். நீங்கள் ஊருக்கும் போகும் போதும் வரும் போது காமநாயக்கம்பட்டி ஊர் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான்.
4. காமநாயக்கம்பட்டி கோவில் திருவிழா என்பதால் அந்த பகுதியில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தை யார் ஓட்டினீர்கள் என்றால் எனது அக்கா தான் ஓட்டினார். சம்பவம் நடந்த சாலை தென்வடல் சாலை, பிரதான சாலை என்றாலும் அந்த சாலை சுமார் 40 அடி அகலமுடையது என்றாலும் சரிதான்.
5. புகாரை காவல்நிலையத்தில் எழுதப்பட்டதா அல்லது சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டதா என்றால் காவல்நிலையத்தில் எனது அக்கா தான் எழுதி கொடுத்தார். நீங்கள் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல நான் சென்றேன். விபத்து சமயம் வந்த ஆட்டோவில் பயணிகள் இருந்தார்களா என்றால் இல்லை அது லோடு ஆட்டோ. அந்த ஆட்டோவின் எண்ணை போலிசார் விசாரணையின் போது சொன்னீர்களா என்றால் நான் சொல்லவில்லை எனது அக்கா சொன்னார்.
6. காமநாயக்கம்பட்டி ஊரில் இருந்து சுமார் 5 கி.மீ தெற்கே தான் சம்பவ இடம் என்றால் சரிதான். நீங்கள் வரும் போது ஆட்கள் கூட்டமாக இருந்ததை பார்த்துவிட்டு சென்று பார்க்கும் போது தான் உங்கள் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது தெரியவந்தது என்றால் சரிதான்.
7. சம்பவ இடத்தில் இருந்து போலிசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நீங்கள் வருவதற்கு முன்னரே போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல நாங்கள் தான் முதலில் போனோம்.

8. உங்கள அப்பாவை எந்த வாகனத்தில் கூட்டிச்சென்றார்கள் என்றால் ஆம்புலன்சில் கூட்டிச்சென்றார்கள். நீங்கள் சம்பவ இடத்தில் பார்க்கும் போது உங்கள் அப்பா ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனமும் உங்கள் அப்பாவும் நடுரோட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான்.
9. எதிரியின் பெயர் விவரம் அனைத்தும் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள்நேரத்தில் விபத்து எதையும் பார்க்கவில்லை என்றாலும் உங்கள் அப்பா தான் மதுபோதையில் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல. இறந்த நபர் உங்கள் அப்பா என்பதால் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.